DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.117/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : திரு.சேவியர் ( சார்பு ஆய்வாளர்) (P.w.7)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of May 2026

(7, 9, 10, 14, 16 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மேற்படி எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது முக்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.காளைச்சாமி என்பவரின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சார்பு ஆய்வாளர் திரு.காளைச்சாமி கடந்த 30.06.2020ம் தேதியன்று மாலை 16.00மணிக்கு நிலையபொறுப்பில் இருந்தபோது, களத்தூர் கிராமத்தைச் சேர்ந்த அருண்குமார் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார்மனு பெற்று, புகார்மனுவின்

தன்மைகேற்ப மேற்படி நிலைய குற்ற எண்.109/2020 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2) and 4 of TNPHW Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த புகார் மனு அசாஆ2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார்மனு ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களை கனம் நீதித்துறை நடுவருக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

2. பின்னர் அன்றைய தினமே 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு முத்துச் செல்வம், பிரபு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். (**அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரிவரைபடம் அசாஆ.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் அருண்குமார், அமர்நாத், சிலம்பரசன், காந்தி, வீரச்செல்வம், அனுஸ்ரீ, பிரபு, முத்துச்செல்வம் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்னர் காயம்பட்டவர்களான அனுஸ்ரீ, வீரசெல்வம், அருண்குமார், அமர்நாத், சிலம்பரசன், காந்தி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த காரியாபட்டி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திரு.சின்னக்கருப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அனுஸ்ரீ, வீரசெல்வம், அருண்குமார், அமர்நாத், சிலம்பரசன், காந்தி ஆகியோருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்றும் காயச்சான்று பெற்றுள்ளார். ( **காரியாபட்டி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர்**

**வழங்கிய விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்றுகள் அசாஆ6 முதல் அசாஆ11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் CRLMP.No. 1509/2020 dt 24.08.2020–ன்படி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றபடியால் அவர்களை கைது செய்யவில்லை.

5.இவ்வழக்கின் விசாரணையில் இருந்து எதிரிகள் கல் மற்றும் கம்பு வைத்து வழி மறித்து தாக்கியது உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 147, 148, 294(பி), 323, 324, 506(2) and 4 of TNPHW Act–லிருந்து இதச பிரிவுகள் 341, 147, 148, 294(பி), 323, 324, 506(2) and 4 of TNPHW Act–ன் மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். (**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.12 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து 20.09.2020ம் தேதியன்று எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 147, 148, 294(பி), 323, 324, 506(2) and 4 of TNPHW Act–ன்–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எ.த.கு.வி–**

நான் சொன்ன நாள், நேரத்தில் சார்பு ஆய்வாளர் அவர்கள் புகார்மனு பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் அவர்கள் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சரியான புலன் விசாரணை மேற்கொள்ளாமல், சாட்சிகளை சரிவர

விசாரணை செய்யாமல் புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.